1971 டிசம்பர் 4]

திருமதி த. ந. அனந்தநாயகி : அந்தக் குழுவை அமைப்பதற்கு முன்னாலே சமதர்ம உணர்வு படைத்த ஒருசில சட்டமன்ற உறுப்பினர்களை அல்லது பிரதிநிதிகளை அந்தக் குழுவில் போட்டால்தான் நல்லமுறையில் இருக்கும். அப்படியில்லாமல் இருந்தால் ஏதாவது கோளாறு ஏற்பட்டு அதற்குப் பிறகு அதை நாம் தீர்ப்பது என்று போனால் காலதாமதம் ஏற்பட்டுக் கொண்டே போகும். எனவே Non-Officials with socialistic idias அப்படிப் பட்டவர்களைப் போட வேண்டும். அந்த அளவுக்கு அந்தக் குழுவை மாற்றியமைக்க அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, இதற்காக அடிப்படையொன்றைத் தயாரித்து பிரிலிமினரி பேசிக் ரிப்போர்ட் கொடுக்கவேண்டுமென்று கேட்கப்பட்டிருக்கிறது. அது வந்ததற்குப் பிறகு சோஷலிச கருத்துள்ள முற்போக்கு எண்ணங் கொண்டவர்களையும் சேர்த்துப் பரிசீலிப்பதில் எங்களுக்கு ஆட்சேபணையில்லை.

THIRU K. S. KOTHANDARAMIAH : May I know from the Hon. Minister whether the Government instructed the Committee to issue a questionnaire and supply copies to the members of the Assembly?

THE HON. THIRU P. U. SHANMUGAM : No, Sir.

ஆளியாறு பழைய ஆயக்கட்டுப் பகுதியில் தண்ணீர் தீர்வை

* 79 **வினா.—திரு. அ. ப. சண்முகசுந்தரம் :** மாண்புமிகு உணவு-வருவாய்த் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பொள்ளாச்சி வட்டம், ஆளியாறு பழைய ஆயக் கட்டுக்கு உட்பட்ட விவசாயிகள் தண்ணீர்த் தீர்வை அதிகப் படுத்தியுள்ளதைத் குறைத்திட வேண்டுமென்று கேட்டு மனு ஏதேனும் அனுப்பியுள்ளார்களா?

(இ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) ஆம்

(இ) அந்த மனு மீது கோவை மாவட்ட ஆட்சியாளரிட மிருந்து குறிப்புகள் வந்திருக்கின்றன. மேலும் கனம் அங்கத் தினர் அவர்களும் இது சம்பந்தமாக முறையீடு கொடுத்திருக்கிறார். இதுபற்றி வருவாய் வாரியம், மாவட்ட கலெக்டர் ஆகியவர்களின் கருத்துக்கள் தெரிந்தவுடன் உரிய முடிவு எடுக்கப்பட்டு ஆணை பிறப்பிக்கப்படும்.